RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 143 | மே.29, 2025 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5



## மநீம மாநிலங்களவை உறுப்பினர் வேட்பாளராக கமல்ஹாசன் தேர்வு: செயற்குழு கூட்டத்தில் தீர்மானம்

சென்னை: மே.29-

வரும் ஜூன் மாதம் நடைபெற இருக்கும் மாநிலங்களவைத் தேர்தலுக்கான மக்கள் நீதி மய்யம் கட்சியின் வேட்பாளராக அக்கட்சித் தலைவர் கமல்ஹாசனை தேர்வு செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மக்கள் நீதி மய்யம் கட்சியின், நிர்வாகக்குழு செயற்குழு கூட்டம் (மே 28) நடைபெற்றது. அதில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவை வருமாறு: 2024ம் ஆண்டு நாடாளுமன்ற பொதுத்தேர்தலின் போது திராவிட முன்னேற்றக் கழகத்துடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில் மக்கள் நீதி மய்யம் கட்சிக்கு 2025ம் ஆண்டு நடைபெறவுள்ள நாடாளுமன்ற மாநிலங்களவை தேர்தலில் ஒரு இடம் ஒதுக்கப்படும் என முடிவு செய்யப்பட்டது.

அதன் அடிப்படையில், வருகிற ஜூன் 19ம் தேதி நடைபெற இருக்கும் 6 தமிழக நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர்களுக்கான தேர்தலில், மக்கள் நீதி மய்யம் கட்சியின் வேட்பாளராக, கமல்ஹாசனை மக்கள் நீதி மய்யம் கட்சியின் நிர்வாகக் குழு, செயற்குழு ஏகமனதாக முடிவு செய்து அறிவிக்கிறது.

மாநிலங்களவை தேர்தலில் மக்கள் நீதி மய்யம் கட்சியின் வேட்பாளரான கமல்ஹாசனுக்கு தங்களது மேலான ஆதரவை நல்கும்படி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான கூட்டணிக் கட்சிகளை மக்கள் நீதி மய்யம் கட்சியின் நிர்வாகக் குழு, செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

தமிழகத்தில் இருந்து மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட திமுக மாநிலங்களவை எம்பிக்கள் எம்.சண்முகம், முகமது அப்துல்லா, பி.வில்சன், பாமக எம்பி அன்புமணி, அதிமுக எம்பி சந்திரசேகரன், மதிமுக எம்பி வைகோ ஆகியோரின் பதவிக் காலம் ஜூலை 24ம் தேதியுடன் நிறைவடைகிறது. இந்த சூழலில் தமிழகத்தில் இருந்து 6 புதிய மாநிலங்களவை உறுப்பினர்களை தேர்வு செய்ய ஜூன் 19ம் தேதி தேர்தல் நடைபெறும் என்று தலைமை தேர்தல் ஆணையம் அண்மையில் அறிவித்தது.

இந்நிலையில், மாநிலங்களவைத் தேர்தலில் போட்டியிடும் திமுக வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர். கூடவே ஏற்கெனவே ஒப்பந்தம் செய்யப்பட்டது போல் மநீமவுக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

## யாரைக் காப்பாற்ற இந்த வேகம்? ஞானசேகரன் வழக்கில் திமுகவுக்கு இபிஎஸ் கேள்வி

சென்னை: மே.29-

சென்னை அண்ணா பல்கலை. மாணவி வன்கொடுமை வழக்கில் ஞானசேகரன் குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளதை வரவேற்றுள்ள அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, திமுகவுக்கு மூன்று கேள்விகளை முன்வைத்துள்ளார்.

"யாரைக் காப்பாற்ற இந்த வேகம்? காலம் மாறும் ! காட்சிகள் மாறும். விரைவில் அதிமுக ஆட்சி அமையும். அந்த SIR "யாராக இருந்தாலும்". கூண்டேற்றட்டப்படுவார். SIR-ஐக் காக்கும் சார்களையும் உடன் ஏற்றி, அவர்களும் நாட்டுக்கு அடையாளம் காட்டப்படுவர்." என்று அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக எக்ஸ் சமூகவலைதளத்தில் அவர் பகிர்ந்த பதிவில், "நாட்டையே உலுக்கிய அண்ணா பல்கலை. பாலியல் வழக்கில், நீதிமன்றம் இன்று தீர்ப்பளித்துள்ளது.

இந்த வழக்கில் அதிமுக தொடர்ந்து போராட்டம் நடத்தி, மாணவியின் குரலாக மக்கள் மன்றத்தில் ஒலித்து வந்த தொடர் முன்னெடுப்புகளின் ஊடாக, தன்னிடம் வழங்கப்பட்ட குற்றப்பத்திரிகை மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு வரவேற்கத்தக்கது.

இருப்பினும், மக்கள் மன்றத்தில் இந்த வழக்கு குறித்து, ஸ்டாலின் மாடல் அரசு மீது நிலவும் முக்கியமான கேள்விகளுக்கு இன்னும் விடை கிடைக்கவில்லை.

›› இந்த வழக்கில் முதலில் கைது செய்யப்பட்ட ஞானசேகரன் உடனடியாக விடுதலை செய்யப்பட்டது ஏன்? விடுதலை மற்றும் மீண்டும் கைதுக்கு இடையில் என்ன நடந்தது?

›› ஞானசேகரன் வீட்டு படுக்கையறையில் அமர்ந்து பிரியாணி சாப்பிடும் அளவிற்கு நெருக்கமாக



இருந்த ஸ்டாலின் அரசின் அமைச்சர் மற்றும் சென்னை துணை மேயர் இந்த வழக்கில் விசாரிக்கப்படாதது ஏன்?

›› SITல் பணியாற்றிய DSP ராகவேந்திரா ரவி ராஜினாமா செய்தது ஏன்? உயர் அதிகாரிகள் அழுத்தம் என்று வந்த செய்திகளுக்கு என்ன விளக்கம்?

›› இவை எல்லாவற்றையும் விட மிக மிக முக்கியமான, இந்த வழக்கின் மூலக் கேள்வியான #யார்_அந்த_SIR ? என்ற கேள்வி, இன்னும் அப்படியே இருக்கிறது!

வழக்கு விசாரணையின் முதற்கட்டம் முடிவதற்குள்ளேயே, ஞானசேகரன் தவிர இந்த வழக்கில் யாரும் குற்றவாளி இல்லை என்று எதற்காக ஸ்டாலின் அரசின் காவல்துறை அவசர அவசரமாக பிரஸ் மீட் கொடுக்க வேண்டும்?

யாரைக் காப்பாற்ற இந்த வேகம்? பாதி நீதியால் தப்பித்துவிடலாம் என்று எண்ணினால், அந்த எண்ணம் ஒருபோதும் ஈடேறாது! காலம் மாறும்! காட்சிகள் மாறும்! விரைவில் அதிமுக ஆட்சி அமையும். அந்த SIR "யாராக இருந்தாலும்", கூண்டேற்றட்டப்படுவார்! SIRஐக் காக்கும் சார்களையும் உடன் ஏற்றி ,அவர்களும் நாட்டுக்கு அடையாளம் காட்டப்படுவர்." எனக் குறிப்பிட்டுள்ளார்.

## பூட்டிக் கிடந்த காரில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 பேரின் சடலம்

டேராடூன்: மே.29-

டேராடூனைச் சேர்ந்தவர் பிரவீன் மிட்டல்,42. இவர் தனது பெற்றோர், மனைவி மற்றும் 3 குழந்தைகளுடன் காரில் மயக்கமடைந்த நிலையில் கிடப்பதாக அக்கம்பக்கத்தினர் போலீசாருக்கு தகவல் கொடுத்தனர்.

அதன்பேரில், விரைந்து வந்த போலீசார், காரின் கண்ணாடியை உடைத்து 7 பேரையும் மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பு வைத்தனர். ஆனால், அவர்களை பரிசோதித்த டாக்டர்கள், 7 பேரும் உயிரிழந்து விட்டதாக தெரிவித்தனர்.

சடலங்கள் எடுக்கப்பட்ட காரில் இருந்து அவர்கள் எழுதி வைத்த கடிதத்தை போலீசார் கண்டுபிடித்தனர். அதில், அதிகளவு கடன் மற்றும் நிதி நெருக்கடி காரணமாக, விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டது தெரிய வந்தது. மேலும், இது குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாக போலீசார் தெரிவித்தனர்.

## நகைக் கடன் விதிகள் மீது மறுபரிசீலனை: ரிசர்வ் வங்கிக்கு அறிவுறுத்த நிர்மலா சீதாராமனுக்கு ஸ்டாலின் கடிதம்

சென்னை: மே.29-

தங்க நகைக்கடன் வழங்குவதற்கான நெறிமுறைகளில் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்து முன்மொழியப்பட்டுள்ள இந்திய ரிசர்வ் வங்கியின் வரைவு வழிகாட்டு நெறிமுறைகளை மறுபரிசீலனை செய்யக்கோரி மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், விவசாயிகளின் 2 லட்சம் ரூபாய் வரையிலான பயிர்க்கடன்களுக்கு தங்க நகைகளை ஈடாக ஏற்றுக்கொள்வதைத் தடுக்கும் வகையில் இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள வரைவு வழிகாட்டு நெறிமுறைகள் குறித்து தமிழக அரசின் கடுமையான கவலை குறித்து தெரிவிக்கவே நான் இக்கடிதத்தை எழுதுகிறேன். தங்கத்தை பிணையாகப் பெற்று வழங்கப்பெறும் கடன்கள் சரியான நேரத்தில், குறுகிய கால பயிர்க்கடன்களுக்கான முதன்மை ஆதாரமாக விளங்குகிறது.

குறிப்பாக சிறு மற்றும் குறு விவசாயிகள், குத்தகைதாரர்கள் மற்றும் பால் பண்ணை, கோழிப்பண்ணை மற்றும் மீன்வளம் போன்ற தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இந்த வரைவு நெறிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டால் பாதிப்படையக்கூடும். அதனால் தமிழ்நாட்டிலும் தென்னிந்தியாவின் பல பகுதிகளிலும் கிராமப்புற கடன் விநியோக முறைக்கு





கடுமையான இடையூறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

பெரும்பாலும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு முறையான நில உரிமைகள் அல்லது சரிபார்க்கக்கூடிய வருமான ஆவணங்கள் இல்லை. அத்தகைய விவசாயிகள் தங்கள் வீட்டுத் தங்கத்தை அடகு வைத்து வங்கிக் கடன்களைப் பெறுவதற்கான ஒரு சாத்தியமான மற்றும் கண்ணியமான வழியாக நகைக்கடன் உள்ளது. தற்போது முன்மொழியப்பட்டுள்ள நெறிமுறைகளால் எளிதாகக் கடன் பெறும் வழியை நேரடியாகக் குறைத்து, கடன் வாங்குபவர்கள் பெரும்பாலானோரை முறையான கடன் வழங்கும் நிதி நிறுவனங்களை நாடுவதை குறைத்துவிடும்.

நகைக்கடன் பெறும் எளிமையான வழிமுறைகள் கட்டுப்படுத்தப்படுவதால், கிராமப்புற கடன் வாங்குபவர்கள் அதிக வட்டி விகிதங்களை வசூலிக்கும் முறைசாரா மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத கடன் வழங்கும் நிறுவனங்களை நோக்கிச் செல்லவேண்டிய கட்டாயம் ஏற்படலாம். இது அவர்களை சுரண்டல் நடைமுறைகளுக்கு ஆளாக்குவதுடன் கடனை அதிகரிக்கும் மற்றும் முறையான நிதி சேர்க்கையில் ஏற்பட்ட முன்னேற்றத்தை தடுக்கும்.

மேலும், கடன் வழங்குபவர்கள் மற்றும் கடன் வாங்குபவர்கள் எதிர்கொள்ளும் சவால்களாக, சிறிய அளவிலான விவசாயக் கடன்களுக்கு கடன் பெறும் திறனை ஆவணமாக மதிப்பீடு செய்யும் முறையானது கிராமப்புறச் சூழலில் செயல்படுத்த முடியாததாக இருக்க வாய்ப்புள்ளது. இது கடன் வழங்கும் நடைமுறையில் தடைகளை உருவாக்கலாம். இந்த வரைவு நெறிமுறைகள் கடன்களை தவறான வகைப்படுத்தலுக்கு வழிசெய்வதுடன், தணிக்கை தடைகளுக்கும் காரணமாக அமைந்து அதன் காரணமாக வங்கி மற்றும் கடனாளி இருதரப்பினருக்கும் பொறுப்பு அதிகரிக்கக் கூடும்.

எனவே, மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, இந்திய ரிசர்வ் வங்கி (தங்க பிணையத்திற்கு எதிராகக் கடன் வழங்குதல்) வழிகாட்டுதல்கள் 2025ல் முன்மொழியப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை மறுபரிசீலனை செய்திட இந்திய ரிசர்வ் வங்கிக்கு அறிவுறுத்த வேண்டும். நடைமுறையில் உள்ள கிராமப்புற கடன் வழங்குதலை அங்கீகரிக்கும் விதமாக, ரூ.2 லட்சம் வரையிலான விவசாய மற்றும் விவசாயம் தொடர்புடைய கடன்களுக்கு தங்கத்தை பிணையமாக தொடர்ந்து ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியம்.

கடன் கோருபவர்களின் நிதி அணுகலைப் பாதுகாக்கும் அதே வேளையில் கடன் பெறும் அளவினை மதிப்பிட ஒரு சமநிலையான ஒழுங்குமுறை மிகவும் பொருத்தமானதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். எனவே, விவசாய சமூகத்துக்கும் கிராமப்புற பொருளாதாரத்துக்கும் அத்தியாவசியமான இந்த விவகாரத்தில் மத்திய நிதியமைச்சர் கவனம் செலுத்தி தீர்வுகாண வேண்டுமென்று அந்தக் கடிதத்தில் முதல்வர் கேட்டுக்கொண்டுள்ளார். இதே கருத்தை வலியுறுத்தி இந்திய ரிசர்வ் வங்கியின் கவர்னருக்கும் தமிழக முதல்வர் கடிதம் எழுதியுள்ளார்.

## அண்ணா பல்கலை. மாணவி வன்கொடுமை வழக்கில் 157 நாட்களில் தீர்ப்பு: இபிஎஸ்ஸுக்கு கனிமொழி பதிலடி

சென்னை: மே.29-

"பொள்ளாச்சி பாலியல் வழக்கில் நியாயம் கிடைக்க ஆறரை ஆண்டு ஆனது. அண்ணா பல்கலைக்கழக மாணவி வழக்கில் 157 நாளில் தீர்ப்பைப் தீர்ப்பை பெற்றுக் கொடுத்திருக்கிறோம். 2019 முதல் 2021 மே வரையில் எடப்பாடி பழனிசாமிதான் ஆட்சியில் இருந்தார். பொள்ளாச்சி பாலியல் வழக்கை அவர் நடத்திய லட்சணத்தை இந்த நாடறியும்," என்று திமுக துணைப் பொதுச் செயலாளரும், எம்.பியுமான கனிமொழி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வழக்கில் கைதான ஞானசேகரன் மீது சுமத்தப்பட்ட 12 குற்றச்சாட்டுகளில், 11 குற்றச்சாட்டுகள் நிரூபணமாகி உள்ளதாக சென்னை மகளிர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்திருக்கிறது. ஜூன் 2ம் தேதி தண்டனை விவரங்களை அளிப்பதாக நீதிபதி அறிவித்திருக்கிறார்.

கடந்த டிசம்பரில் நடந்த நிகழ்வில் மிகத் துரிதமாகக் குற்றவாளியைக் கண்டுபிடித்து, குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்து, வழக்கு விசாரணையை முடித்து, குற்றவாளிக்குத் தண்டனையையும் பெற்றுக் கொடுத்திருக்கிறது தமிழகக் காவல் துறை. அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் கடந்த டிசம்பர் 23ம் தேதி அதே பல்கலைக்கழக மாணவி ஒருவர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டார். உடனே குற்றவாளி ஞானசேகரனை போலீஸ் கைது செய்தது. 3 பெண் ஐபிஎஸ் அதிகாரிகள் கொண்ட சிறப்புக் குழு, வழக்கை விசாரித்தது.

பாலியல் வழக்கு மட்டுமல்லாது, ஏற்கெனவே



ஞானசேகரன் மீதான திருட்டு, ஆள் கடத்தல், வீடு புகுந்து கொள்ளையடித்தல் உள்ளிட்ட பல வழக்குகளையும் காவல் துறை விசாரித்தது. மார்ச் மாதம் முதல் விசாரணை தொடங்கியது. தினந்தோறும் என்ற அடிப்படையில் ஏப்ரல் 23ம் தேதி முதல் சாட்சிகள் விசாரணை நடைபெற்றது. பாதிக்கப்பட்ட மாணவி உள்பட 29 பேர் சாட்சியம் அளித்தனர். 75 சான்று ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டன.

சம்பவம் நடந்த நாளிலிருந்து சரியாக 157ஆவது நாளில் குற்றவாளியின் தண்டனையை உறுதி செய்திருக்கிறது தமிழகக் காவல்துறை. இந்த வழக்கில் சென்னை உயர் நீதிமன்றத்தில், சிபிஐ விசாரணையை கேட்ட போது, 'சிபிஐ விசாரணை தேவையில்லை' என டிஜிபி அறிக்கை தாக்கல் செய்தார். சிபிஐ கூட இவ்வளவு துரிதமாக விசாரித்திருக்க முடியுமா? எனக் கேட்கும் அளவுக்கு இந்த வழக்கைத் தமிழகக் காவல் துறை மிகச் சிறப்பாக நடத்தி குற்றவாளியின் குற்றத்தை நிரூபித்திருக்கிறது.

இந்த வழக்கு தொடர்பாகக் கடந்த ஜனவரி 8ம் தேதி சட்டமன்றத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசும்போது, "இந்த வழக்கின் குற்றவாளி மீது தயவுதாட்சணியம் இல்லாமல் காவல்துறை நடவடிக்கை எடுக்கும். இந்த வழக்கில் 60 நாட்களுக்குள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும். விரைவு நீதிமன்றத்தில் விசாரணை நடத்தப்பட்டு, குற்றவாளிக்கு உச்சபட்சத் தண்டனை கிடைக்கும்" என்று சொன்னார். அதனைச் செய்து காட்டியிருக்கிறார்.

அண்ணா பல்கலைக்கழக மாணவி வழக்கில் தீர்ப்பு வெளியாவதற்கு 15 நாட்களுக்கு முன்புதான், பொள்ளாச்சி பாலியல் வழக்கில் 9 பேருக்குச் சாகும் வரை ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. அந்த வழக்கோடு அண்ணா பல்கலைக்கழக மாணவி வழக்கையும் கொஞ்சம் ஒப்பிட்டுப் பாருங்கள்.

எடப்பாடி பழனிசாமி ஆட்சியில் நடந்த பொள்ளாச்சி பாலியல் வழக்கு நாட்டையே உலுக்கியது. பொள்ளாச்சி பாலியல் குற்றச் சம்பவம் கடந்த 2016ம் ஆண்டு முதல் 2018ம் ஆண்டு வரை நடைபெற்றாலும், 2019ம் ஆண்டுதான் வெளிச்சத்துக்கு வந்தது. அன்றைக்குத் திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சிகளும் ஊடகங்களும் பொள்ளாச்சி பாலியல் வழக்கை வெளிக் கொணராமல் போயிருந்தால் அன்றைய எடப்பாடி பழனிசாமி அரசு விவகாரத்தை மூடி மறைத்திருக்கும். அதிமுகவினர் சம்பந்தப்பட்டிருந்ததால் வழக்கைப் பதியாமல் இழுத்தடித்ததோடு பாதிக்கப்பட்ட மாணவியின் அண்ணனையே தாக்க முயன்றார்கள்.பொள்ளாச்சி பாலியல் வழக்கு கடந்த வந்த பாதையைக் கொஞ்சம் திரும்பிப் பாருங்கள்.

2019 பிப்ரவரி 24 கல்லூரி மாணவி புகார் அளித்தார். வழக்குப்பதிவு செய்து 3 பேரைக் கைது செய்தனர்.

2019 மார்ச் 4 முக்கிய குற்றவாளி திருநாவுக்கரசு கைது.

2019 மார்ச் 12 சிபிசிஐடிக்கு வழக்கு மாற்றம்.

2019 ஏப்ரல் 27 வழக்கு சிபிஐக்கு மாற்றம்.

2019 மே 21 முதல் குற்றப்பத்திரிகை தாக்கல்.

2021 ஜனவரி 6 இறுதி குற்றப்பத்திரிகை தாக்கல்.

2023 பிப்ரவரி 24 சாட்சி விசாரணை தொடங்கியது.

2024 பிப்ரவரி 23 ஞூ குற்றவாளிகள், சாட்சியங்களிடம் தினமும் விசாரணை நடைபெற்றது.

2025 மே 13 ஞூ தீர்ப்பு

2019 பிப்ரவரி தொடங்கி 2025 மே மாதம் வரையிலான ஆறரை ஆண்டுகள் பொள்ளாச்சி பாலியல் வழக்கு நடைபெற்றது. இத்தனைக்கும் அந்த வழக்கை விசாரித்தது சிபிஐ. ஆனால், அண்ணா பல்கலைக்கழக வழக்கை விசாரித்தது தமிழகக் காவல் துறை. பொள்ளாச்சி பாலியல் வழக்கில் நியாயம் கிடைக்க ஆறரை ஆண்டு ஆனது. அண்ணா பல்கலைக்கழக மாணவி வழக்கில் 157 நாளில் தீர்ப்பைப் தீர்ப்பை பெற்றுக் கொடுத்திருக்கிறோம். 2019 முதல் 2021 மே வரையில் எடப்பாடி பழனிசாமிதான் ஆட்சியில் இருந்தார். பொள்ளாச்சி பாலியல் வழக்கை அவர் நடத்திய லட்சணத்தை இந்த நாடறியும். இவ்வாறு கனிமொழி கூறியுள்ளார்.

# பாபா சாஹிப் அம்பேத்கர் அவர்களின் 135 ஆவது பிறந்த நாள் பாலா சாகிப் பிரகாஷ் அம்பேத்கர் அவர்களின் 71வது பிறந்தநாள் மே தினமாகிய முப்பெரும் விழா





தேனி மே29-

தேனி மாவட்டம் தேனி தனியார் திருமண மண்டபத்தில் மாவட்ட செயலாளர் கே.பிச்சை தலைமையில் சி.நடராஜன் மாவட்ட தலைவர் துவக்க உரையுடன் மாநில தலைவர் தோழர் அன்பு வேந்தன் சிறப்புரை வாழ்த்துரை மாநில பொதுச் செயலாளர் கே. தன்ராஜ் வாழ்த்துரை மாநில அலுவலக செயலாளர் கல்பனா ஆர்பிஜ இணை ஒருங்கிணைப்பாளர் மு. மதில்வாணன் மாநில துணைச் செயலாளர் ஜெகநாதன் பிமணிகண்டன் அமைப்பாளர் எம். பிச்சையம்மாள் மாவட்ட துணை தலைவர் பி வேல்முருகன் மாநில மாவட்ட துணை செயலாளர் ஜி முருகன் எம் முருகேசன் கிளைதலைவர் ஆகியோர் முன்னிலையில் இந்திய அரசியல் சட்ட மாமேதையும் இந்திய தொழிலாளர்களின் விடிவெள்ளியுமான பாபாசாகிப் அம்பேத்கர் அவர்களின் 135 வது பிறந்த நாளை உலகத் தொழிலாளர்களின் தினமான மே தினத்தில் கொண்டாடுவது தான் பொருத்தமானதாகும். அதே போன்று அம்பேத்கர் அவர்களின் வாரிசான அவருடைய பேரன் எங்களின் தேசிய தலைவர் பாலா சாகேப்.சீ.பிரகாஷ் அம்பேத்கர் அவர்களின் 71 ஆம் ஆண்டு பிறந்த (மே10) நாளையும் மிகுந்த மகிழ்ச்சியுடன் கொண்டாடுவதில் பெருமை கொள்கிறோம். இவற்றுடன் மே தினத்தையும் தொழிலாளர்களின் இழந்த உரிமைகளை மீட்டு எடுக்கவும், இருக்கும் உரிமைகளை பாதுகாக்கவும், இந்த முப்பெரும் விழாவில் இந்திய குடியரசு தொழிலாளர் தொழிற்சங்கம் உறுதி ஏற்கும் விழாவாக கொண்டாடப்படுகிறது. இதன் அடிப்படையில்10 தீர்மானங்கள் நிறைவேற்றி கோரிக்கைகளை தமிழ்நாடு அரசுக்கு நிறை வேற்ற வலியுறுத்தினர்.

தேனி மாவட்டத்தில் உள்ள பஞ்சமர் நிலங்களை ஆய்வு செய்து முறையான கணக்கெடுப்பு நடத்தி ஆக்கிரமிப்புகளை கண்டறிந்து அவற்றை மீட்டெடுத்து இந்த நிலத்தின் உரிமையாளர் அல்லது அவர்களின் வாரிசுதாரர்களுக்கும், நிலமற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கும் நிலத்தை பகிர்ந்து அளிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் வழியாக தமிழக அரசை வலியுறுத்துகிறோம்.

சமூக நீதி காக்கும் திராவிட மாடல் அரசு என தன்னை தானே தம்பட்டம் அடித்துக் கொள்ளும் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திமுக அரசு கடந்த சட்டமன்றத் தேர்தலின்போது, திமுக ஆட்சிக்கு வந்தவுடன் துப்புரவு பணியாளர்கள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் அத்தியாவசிய அடிப்படை தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைவரையும் நிரந்தர பணியாளராக மாற்றுவோம் என உறுதி அளித்ததை மறந்துவிட்டு அனைத்து துறைகளையும் 100% தனியாருக்கு தாரைவார்த்து தொழிலாளர்களின் வேலை பாதுகாப்பு உரிமையை பறிக்கப்பட்டுள்ளதைவன்மையாக கண்டிப்பதுடன், தங்களின் தேர்தல் கால வாக்குறுதிகளான பணி நிரந்தரம், பழைய ஓய்வு திட்டம், சமூக நீதியை நிலைநாட்டும் இட ஒதுக்கீட்டை முறையாக நிறைவேற்றவேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

தேனி மாவட்டத்தில் கிராம பஞ்சாயத்து, ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள், உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் பணியாற்றி வரும் ஒப்பந்த தூய்மை பணியாளர்கள் மற்றும் அவுட்சோர்சிங் அடிப்படையில் வேலை செய்யும் அனைத்து தொழிலாளர்களுக்கும் வீட்டு வசதி, பணியிடத்தில் பாதுகாப்பு உறுதிப்படுத்துவதுடன் அனைத்து தொழிலாளர்களுக்கும் மூன்று மாதத்திற்கு ஒரு முறை இலவச மருத்துவ பரிசோதனை மற்றும் இலவச மருத்துவ உதவிகள் அளிக்க வேண்டும் என மாவட்ட நிர்வாகத்தை கேட்டுக்கொள்கிறோம். எஸ்சி எஸ்டி அரசு பணியாளர்களுக்கு பதவி உயர்வு இட ஒதுக்கீடு வழங்க சிறப்பு சட்டம் உடனே இயற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழக அரசை வலியுறுத்துகிறது.

மத்தியமாநில அரசுகளால் எஸ்சி எஸ்டி மக்களின் மேம்பாட்டிற்காக ஒதுக்கப்படும் சிறப்பு உட்கூறு திட்ட நிதி மக்கள் தொகைக்கு ஏற்ப அதிகரித்து வழங்க வேண்டும். மேலும் இத்திட்டத்திற்காக ஒதுக்கப்படுகிற நிதியை மலம்அள்ளவும், சாக்கடைகளை அகற்றவும் என அடிமை வேலை செய்யும் திட்டங்களுக்கு எஸ்சி,எஸ்டி மக்களை திட்டமிட்டு தள்ளப்படுவதை திட்டங்களை தவிர்த்துவிட்டு, புதிய சிறப்பு திட்டங்களை உருவாக்கி இந்த மக்களை மேம்படுத்த நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என தமிழக அரசை வலியுறுத்துகிறது.

தேனி மாவட்டத்தில் எஸ்சி,எஸ்டி மற்றும் துப்புரவு தொழிலாளர்களை சாதிய வன்மத்துடனும், பழிவாங்கும் நோக்குடனும் பணியின் போது பாகுபாடு காட்டும் அலுவலர்கள் மீதும்,கிராம பஞ்சாயத்து, பேரூராட்சி, நகராட்சி உள்ளிட்ட பணியிடங்களில் அலுவலர்களும், சட்ட விதிகளுக்கு புறம்பாக நிர்வாகத்தில் தலையிடும் ஆதிக்க மனப்பான்மை கொண்ட தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் மீதும் எஸ்சி,எஸ்டி வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து கடுமையான தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழக அரசை வலியுறுத்துகிறோம்.

தேனி மாவட்டத்தில் துப்புரவு பணிகளை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொண்டு வரும் அவர் லேண்ட் இன்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட்கிரீன் டிரஸ்ட் நிறுவனம், ராமன்-கோ உள்ளிட்ட தனியார் நிறுவனங்கள் தூய்மை பணியாளர்களின் வருவாயை சுரண்டுவதோடு, அரசு பொது சுகாதாரத்தை பாதுகாத்திட வழங்கும் தொகையை முறையாக செயல்படுத்தாமல் கொள்ளையடிக்கும் நோக்கோடு மஸ்டர் ரோல் ஊழல் போன்று பல்வேறு முறைகேடு களில் ஈடுபட்டு வருகின்றன. இது குறித்து இந்திய குடியரசு தொழிலாளர் தொழிற்சங்கம் ஆதாரத்துடன் புகார் கொடுத்தும் இதுவரை எவ்விதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது அரசே ஊழலுக்கு துணை போகும் செயலாகும். எனவே மேற்படி முறைகேடுகளில் ஈடுபட்டு வரும் தனியார் நிறுவனங்களை தடை செய்வதோடு இந்நிறுவனங்களின் ஊழலுக்கு துணையாக செயல்படும் அலுவலர்கள் மீதும் வழக்கு பதிவு செய்து விசாரணை செய்து கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம். தமிழ்நாடு அரசின் பொதுப்பணி துறையின் மூலமாகவும், தாட்கோ உள்ளிட்ட அரசு துறைகளின் மூலமாக மேற்கொள்ளப்படும் கட்டுமான பணிகள், சாலை அமைத்தல், ஏரிகளை தூர்வாருதல் உள்ளிட்ட அனைத்து ஒப்பந்தங்களிலும் எஸ்சி, எஸ்டி தொழில் முனைவோருக்கு உரிய பங்கீட்டை முன்னுரிமையின் அடிப்படையில் வழங்க வேண்டும் என தமிழக அரசை கேட்டுக்கொள்கிறோம். தமிழக அரசின் தாட்கோ மூலம் எஸ்சி, எஸ்டி தொழில் முனைவோருக்கான கடன் உதவி வழங்கும் கோரிக்கை மனுக்கள் மீது தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் போதிய அக்கறை செலுத்தாமல், கடன் உதவி மனுக்களை தள்ளுபடி செய்கிறது. இதனால் தொழில் தொடங்க பல்வேறு திறமைகள் இருந்தும் வேலை வாய்ப்பற்ற இளைஞர்கள் தொழில் துவங்க காத்திருக்கும் எஸ்,எஸ்.டி இளைஞர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளனர். எனவே தாட்கோவே ஒரு தனி வங்கியை உருவாக்கி தொழில் கடன் உதவியை நேரடியாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம். தமிழகத்தின் பழங்குடி இனங்களில் ஒன்றான குறவர் சமூக மக்களை சுதந்திரத்திற்கு பின் பல்வேறு காரணங்களை காட்டி 27 வகையாக பிரித்து மலைக்குறவன் (ST) குறவர் (DNC) குறவன்(ஷிசி) என 26 வகையான குறவர் சமூத்தினரை மூன்று பிரிவுகளில் சாதி சான்று வழங்கப்பட்டு வருகிறது. அரசின் இத்தகைய நடைமுறையால் இம் மக்களை அடையாளப்படுத்துவதில் ஏற்படும் குளறுபடிகளின் காரணமாகவும், அரசு அலுவலர்களின் மெத்தனப்போக்காலும், இவர்களுக்கு சாதி சான்றுவழங்குவதில் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டு வருகிறது. இப் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வகையில் தேசிய எஸ்.சி.எஸ்.டி ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் ஜக்கா.பார்த்தசாரத தலைமையிலான ஆய்வு குழுவின் பரிந்துரைகளை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படாமல் நீண்ட காலமாக முடக்கப்பட்டுள்ளது. இதனால் நீண்ட காலமாக இச்சமூக மக்களின் கல்வி,வேலை வாய்ப்பு மற்றும் அரசின் நல திட்டங்கள் இவர்களுக்கான சமூக பாதுகாப்பு ஆகியவை மறுக்கப்பட்டு வருகிறது. எனவே இந்த பிரச்சனைகளுக்கு நிரந்தரமான தீர்வு காண உரிய வகையில் ஆய்வு மேற்கொண்டு அவர்களுக்கான உரிய சாதி சான்று வழங்கி இந்த மக்களின் உரிமைகளை நிலைநாட்ட வேண்டும் என சமூக நீதி அரசை இந்திய குடியரசு தொழிலாளர் தொழிற்சங்கம் கேட்டுக்கொள்கிறது.



## தொடர் மழையால் நீர்வரத்து அதிகரிப்பு 7 குளங்கள் நிரம்பின

கோவை, மே.29-

கோவை மாவட்டத்தில் கடந்த 3 நாட்களாக தொடர் மழை பெய்து வருகிறது. குறிப்பாக, வால்பாறை, மேட்டுப்பாளையம், மேற்கு தொடர்ச்சி மலையொட்டிய சிறுவாணி, தொண்டா முத்தூர் உள்ளிட்ட பகுதிகளிலும் கனமழை பெய்து வருகிறது.

சிறுவாணி பகுதியில் பெய்து வரும் தொடர் மழையினால் நொய்யல் ஆற்றின் முதல் அணையான சித்திரைச்சாவடி அணைக்கு வினாடிக்கு 650 கனஅடி நீர்வரத்து இருக்கிறது. தொடர்ந்து மழை பெய்து வருவதால் ஆற்றில் நீர்வரத்து அதிகரிக்கும் என கூறப்படுகிறது. இதையடுத்து, அணையில் இருந்து தண்ணீர் கால்வாய் வழியாக குளங்களுக்கு திறந்துவிடப்பட்டு உள்ளது.

இதனால், மாநகராட்சி கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கிருஷ்ணாம்பதி, செல்வசிந்தாமணி, குமாரசாமி, செல்வம்பதி, சிங்காநல்லூர் ஆகிய 5 குளங்கள் உள்பட பெல்லாதி, இருகூர் குளங்கள் என மொத்தம் 7 குளங்கள் முழுவதுமாக நிரம்பியுள்ளன.

மேலும், 348 ஏக்கர் பரப்பிலான உக்கடம் பெரியகுளம் 92 சதவீதம் நிரம்பி உள்ளது. நீலாம்பூர், சூலூர் பெரியகுளம் தலா 95 சதவீதமும், உக்குளம் மற்றும் வாலாங்குளம் 82 சதவீதமும், குறிச்சி குளம் 72 சதவீதமும், நரசாம்பதி மற்றும் பேரூர் பெரியகுளம் 62 சதவீதமும் நிரம்பி உள்ளது. தொடர்ந்து குளங்களுக்கு தண்ணீர் சென்று கொண்டிருக்கிறது.

நொய்யல் ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதையடுத்து, ஆற்றில் குளிக்க வேண்டாம் என பொதுமக்களுக்கு பொதுப்பணித்துறை சார்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சிறுவர்கள், இளைஞர்கள் தடுப்பணைகளில் குளிக்க வேண்டாம் எனவும் அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

மேலும், கோவை மாவட்டத்தில் இன்றும், நாளையும் கனமழை பெய்யும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, மாவட்ட நிர்வாகம் சார்பில் பேரிடர் மீட்பு குழுவினர், தீயணைப்பு துறையினர் உள்ளிட்ட பிற துறையினரும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை 7.30 மணி முதல் நேற்று காலை 7.30 மணி வரையிலான 24 மணி நேரத்தில் மாவட்டம் முழுவதும் 754.80 மிமீ மழை பதிவாகியுள்ளது.

மற்ற பகுதிகளில் பெய்த மழை அளவு மில்லி மீட்டரில் வருமாறு: பீளமேடு 10.60, வேளாண் பல்கலை 7.70, பெரியநாயக்கன்பாளையம் 3, மேட்டுப்பாளையம் 8, பில்லூர் அணை 7, அன்னூர் 5.20, கோவை தெற்கு 19.70, சூலூர் 10, வாரப்பட்டி 23, தொண்டாமுத்தூர் 19.80, சிறுவாணி அடிவாரம் 86, மதுக்கரை 16, போத்தனூர் 12.40, பொள்ளாச்சி 28.40, மக்கினாம்பட்டி 44.60, கிணத்துக்கடவு 26, ஆனைமலை 39, ஆழியார் 28.40, சின்கோனா 70, சின்னகல்லார் 116, வால்பாறை 58, வால்பாறை தாலுகா 55, சோலையார் 61.

கட்டுப்பாட்டு அறைக்கு 22 புகார்கள் வந்தன

கோவை மாவட்டத்திற்கு இரண்டு நாட்களுக்கு ரெட் அலர்ட் விடுக்கப்பட்ட நிலையில், மாவட்ட அவசர கட்டுப்பாட்டு அறை திறக்கப்பட்டு உள்ளன. இந்த கட்டுப்பாட்டு அறைக்கு 2 நாளில் மின்சாரத் தடை தெடார்பாக 15 புகார், மரம் விழுந்தது குறித்த 5 புகார் மற்றும் கழிவுநீர், மழைநீர் தேங்குதல் தொடர்பாக 2 புகார்கள் என மொத்தம் 22 புகார்கள் வந்தன. இந்த புகார்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அதிகாரிகள் தரப்பில் தெரிவித்தனர்.



## த.வெ.க சார்பில் தாம்பரம் தொகுதியில் மே 28 உலக பட்டினி தினத்தை முன்னிட்டு ஏழை எளிய மக்களுக்கு சமபந்தி விருந்து

தாம்பரம், மே.29-

செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் தொகுதியில் த.வெ.க தலைவர், தளபதி விஜய்வழிக்காட்டுதலின் படியும், கழகப் பொதுச்செயலாலர் . புஸ்ஸி, என். ஆனந்த அறிவுருத்தலின் படியும் நேற்று மே 28 உலக பட்டினி தினத்தை முன்னிட்டு டீ 12 தாம்பரம் மாநகர காவல் சேலையூர் காவல் நிலையம் சோதனை சாவடி அருகில் 28.05.2026, 12 மணியளவில் சிட்லபாக்கம் பகுதி தலைமை, யோகேஷ் அவர்களின் நிகழ்ச்சி ஏற்பாட்டில் தாம்பரம் தொகுதியில் ஏழை எளிய மக்களுக்கு சமபந்தி விருந்து வழங்கப்பட்டது. இதை செங்கல்பட்டு வட மேற்கு மாவட்ட கழகச் செயலாளர், டி. சரத்குமார் அவர்கள் தலைமை ஏற்று நடத்தினார். மேலும் இவ்விழாவில் மாவட்ட நிர்வாகி ஷீபா பிரேம், கிழக்கு தாம்பரம் பகுதி , டி. தினேஷ், டி. விஜி மேற்கு தாம்பரம் பகுதி, எம். பிரவீன் குமார், வர்த்தக அணி தலைமை முடிச்சூர் பழனி முருகன், வழக்கறிஞர் அணி தலைமை, பிரவின் குமார், மாவட்ட மகளிரணி இந்துமதி, விக்டோரியா, மாவட்ட மாணவரணி தலைமை சுபாஷ், விக்கி,தொழிநுட்ப அணி சாய் மற்றும் இவ்விழாவுக்கு ஒத்துழைப்பு வழங்கிய நிர்வாகிகள் பி. காசிராம், என். பிராகாஷ் ஆர். விஜய், ஜீவா, ஹரி, விஸ்வா, கைலாஷ், சஞ்சய், தினேஷ், பார்த்திபன், திருநாவுக்கரசு, சிட்லபாக்கம் பகுதி இளைஞரணி தலைமை, டி. ஹரிஷ், ஆர். ஜெகன், எஸ். விஜய் துரை, என். மனிஷ், தேசிங், முகேஷ் உடன் இருந்தனர்.



## அனகாபுத்தூரில் இருந்து கீரப்பாக்கம் அடுக்குமாடி குடியிருப்பில் குடியேறிய மக்களுக்கு முகவரி மாற்றும் முகாம். அதிகாரிகள் ஆய்வு

கூடுவாஞ்சேரி, மே.29-

செங்கல்பட்டு மாவட்டம் அனகாபுத்தூரில் இருந்து கீரப்பாக்கம் அடுக்குமாடி குடியிருப்பில் குடியேறிய மக்களுக்கு முகவரி மாற்றும் முகாம் நடைபெற்றது. இதனை அதிகாரிகள் நேற்று ஆய்வு செய்தனர். சென்னை, பல்லாவரம் அடுத்த அனகாபுத்தூரில் உள்ள கூவம் ஆற்றங்கரை ஓரம் மக்கள் பல ஆண்டுகளாக குடியிருந்த 400க்கும் மேற்பட்ட வீடுகளை அகற்றி செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் அடுத்த கீரப்பாக்கம் ஊராட்சிக்கு உட்பட்ட 4வது வார்டு விநாயகபுரம் பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாடு வாரியத்தின் சார்பில் கட்டப்பட்ட 1760 அடுக்குமாடி குடியிருப்பு வீடுகளில் குடியமர்த்த சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. அதன் பேரில் அனகாபுத்தூரில் உள்ள ஆக்கிரமிப்பு வீடுகள் அகற்றப்பட்டன. அங்கிருந்து வந்த 404 குடும்பத்தினருக்கு அரசு ஆவணங்களில் முகவரி மாற்றும் முகாம் கீரப்பாக்கத்தில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு வளாகத்தில் நேற்று நடைபெற்றது. இதில் ஸ்மார்ட் ரேஷன் கார்டு, ஆதார் கார்டு வாக்காளர் அடையாள அட்டை கேஸ் புத்தகம் வங்கி புத்தகம் பல்வேறு அரசு ஆவணங்களில் முகவரி மாற்றுவதற்கான விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் பொதுமக்கள் கொடுத்தனர். இதனை குடிசை மாற்று வாரிய நிர்வாக பொறியாளர் குமரேசன், உதவி நிர்வாகப் பொறியாளர் சுப்பிரமணி, தாம்பரம் மாநகராட்சி ஆணையாளர் பாலச்சந்தர், தாம்பரம் ஆர்டிஓ முரளி, வண்டலூர் தாசில்தார் புஷ்பலதா உள்ளிட்டோர் முகாமினை ஆய்வு செய்தனர். அப்போது பொதுமக்களிடம் சென்று குறைகளை கேட்டு அறிந்தனர். இதனை அடுத்து அப்பகுதி மக்களுக்கு பஸ் வசதி, இன்டர்நெட் வசதி, குடிநீர் வசதி, அரசு பள்ளியை தரம் உயர் த்துதல், சுடுகாடு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்து கலந்து ஆலோசனை நடத்தினர். பின்னர் சம்பந் தப்பட்ட துறை அலுவலர்கள் நடவடிக்கை எடுக்கும்படி தாம்பரம் ஆர்டிஓ முரளி வண்டலூர் தாசில்தாருக்கு அதிரடியாக உத்தரவிட்டார். அப்போது கீரப்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் செல்வசுந்தரிராஜேந்திரன், துணை தலைவர் பாலாஜி, 4வது வார்டு உறுப்பினர் சசிகலாதனசேகரன் உட்பட ஏராளமானோர் உடனிருருந்தனர்.

## கோடை விடுமுறை இறுதி நாட்களில் சுற்றுலா தலங்களில் குவியும் மக்கள்

ஆண்டிபட்டி, மே.29-

ஆண்டிபட்டி அருகே உள்ள வைகை அணை பூங்காவில் நேற்று சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்து காணப்பட்டது. தமிழ்நாட்டில் கோடை விடுமுறை முடிவடைய உள்ள நிலையில் பல்வேறு சுற்றுலாத்தலங்களில் சுற்றுலா பயணிகள் குவிந்த வண்ணம் உள்ளனர்.

அந்த வகையில் ஆண்டிபட்டி அருகே உள்ள வைகை அணை பூங்கா பகுதி யில் கோடை விடுமுறை நாளை முன்னிட்டு நேற்று சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்து காணப் பட்டது. வைகை அணை பூங்காவிற்கு குடும்பத்துடன் சென்று வருவதற்கும், குழந்தைகள் குஷியாக விளையாடுவதற்கும் ஏற்ற இடமாக உள்ளது. பிரமாண்டமாக எழுந்து நிற்கும் அணையின் இரண்டு புறங்களும் வலது கரை பூங்கா, இடது கரை பூங்காக்கள் உள்ளது.

இந்த இரண்டு கரை பூங்காக்களிலும் ஏராளமான பொழுது போக்கு அம்சங்கள் உள்ளது. சிறுவர்கள் மகிழ்ந்து விளையாடுவதற்கு சிறுவர் பூங்கா, பெரியார் மாதிரி வைகை பூங்கா, மச்சக் கன்னி பூங்கா, பயில்வான் பார்க், யானை சறுக்கல், ஊஞ்சல், மலைகள் போல் அமைக்கப்பட்டு வரைபடங்கள், நீரூற்றுகள், புல்தரைகள், ஆங்காங்கே ஓய்விடங்கள், குழந்தைகள் குஷியாக சென்று வர உல்லாச ரயில், படகு குழாம், இசையுடன் தண்ணீர் நடனமாடும் வகையில் அமைக்கப்பட்டு இசை நடன நீரூற்று என ஏராளமான அம்சங்கள் செய்யப்பட்டுள்ளது.

பூங்காவில் தனியார் மூலம் ராட்டினங்கள் அமைக்கப்பட்டுள்ளதால் அதில் அதிக அளவு கூட்டம் காணப்பட்டது. மேலும் சிறுவர்களுக்காக இயக்கப்படும் உல்லாச ரயிலில் குடும்பத்துடன் பயணம் செய்து மகிழ்ந்தனர். பூங்காவில் புல்வெளிகளில் குடும்பம் குடும்பமாக அமர்ந்து மகிழ்ச்சியுடன் விளையாடினர். வைகை அணை பூங்காவில் ஏராளமான பொழுது போக்கு அம்சங்கள் செய்யப்பட்டுள்ளதால், காலை முதல் மாலை வரையில் மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து கொண்டே இருந்தனர்.



# சிவகங்கை மாவட்டம் கல்லல் ஆசிரியருக்கு இலக்கிய மாமனி விருது

சென்னை, மே.29-

சென்னையை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் உலகத் தமிழ்க் கவிஞர்கள் கலை இலக்கியச் சங்கம் மற்றும் கவிஞர் குரல் பதிப்பகம் இணைந்து மேனாள் அரசவைக் கவிஞர் திரைப்படப் பாடலாசிரியர் கவிஞர் முத்துலிங்கம் அவர்களின் 50 ஆண்டு கலைச் சேவையை பாராட்டும் வகையில் சென்னை எழும்பூர் கன்னிமாரா நூலகம் அருகே அமைந்துள்ள உள்ள இக்சா மையத்தில் பாராட்டு விழா நடத்தியது. அவ்விழாவில் சிவகங்கை மாவட்டம் கல்லலைச் சேர்ந்த ஆசிரியர் பிரபு அவர்களுக்கு கவிஞர் முத்துலிங்கம் "இலக்கிய மாமணி விருது" கவிஞர் முத்துலிங்கம் அவர்களின் திருக்கரங்களால் வாழ்த்தி வழங்கப்பட்டது. ஆசிரியர் பணியோடு எழுத்தாளர், கவிஞர் என்ற அடையாளத்தோடு மகா பிரபு என்ற புனைபெயரில் இவர் இதுவரை 8 நூல்களை எழுதியுள்ளார். இதில் கட்டுரை, கவிதை மற்றும் நுண் கதை நூல்கள் அடங்கும். ஆங்கிலத்திலும் டிப்ஸ் அண்ட் சிப்ஸ் என்கிற ஒரு நூலையும் எழுதியுள்ளார். தனது நூல்கள் மூலம் 65 எழுத்தாளர்களை தமிழ் இலக்கிய குழுவிற்கு அறிமுகப்படுத்தியுள்ளார். இவரது இலக்கியச் சேவையை பாராட்டும் நோக்கில் இவ்விருது வழங்கப்பட்டது. இவ்விழாவின் ஒரு பகுதியாக நடைபெற்ற 424வது மாத இளந்தென்றல் கவியரங்கத்தில் தாய் மண்ணே வணக்கம் என்னும் தலைப்பில் நடைபெற்ற கவியரங்கத்தில் பங்கு பெற்று கவி படைத்தமைக்காக கவிஞர் " நற்கவிஞர் பாராட்டு சான்றிதழும் "வழங்கப்பட்டது. மகா பிரபு விற்கு இவ்விழாவில் இவ்வமைப்பின் தலைவர் எடையூர் நாகராசன், பொதுச் செயலாளர் கலையரசன், பொருளாளர் ஆறுமுகம் உள்ளிட்ட கவிஞர்களுடன் தமிழ்நாட்டில் இருந்து திரளாக கவிஞர் களும், இலக்கிய படைப்பா ளர்களும் கலந்து கொண்டனர்.

# உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு ரயில் நிலையங்களில் பிளாஸ்டிக் பயன்பாடு ஒழிப்பு பிரச்சாரம்

மதுரை: மே.29

உலக முழுவதும் ஜூன் 5 அன்று உலக சுற்றுச்சூழல் தினம் அனுசரிக்கப்பட இருக்கிறது. இதை பயன்படுத்தி பொதுமக்கள் மற்றும் ரயில் பயணிகளிடம் பிளாஸ்டிக் மாசு ஒழிப்பு பிரச்சாரத்தை மேற்கொள்ள ரயில்வே வாரியம் அறிவுறுத்தியுள்ளது. இந்த சுற்றுச்சூழல் விழிப்புணர்வு பிரச்சாரம், அனைத்து ரயில் நிலையங்களிலும் மற்றும் ரயில்வே குடியிருப்புகளிலும் மே 22 முதல் ஜூன் 5 வரை மேற்கொள்ளப்படும். பிளாஸ்டிக் பயன்பாட்டை குறைத்து எவர்சில்வர் அல்லது மறு சுழற்சிக்கு தகுதியான பிளாஸ்டிக் தண்ணீர் பாட்டில், டிபன் பாக்ஸ், மூங்கில் பல்துலக்கி, வேப்ப மரத்தில் செய்யப்பட்ட சீப்பு போன்றவற்றை உபயோகிக்க வலியுறுத்தி சமூக வலைதளங்கள் மற்றும் சுவரொட்டி விளம்பரங்கள் வாயிலாக பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகிறது. பிளாஸ்டிக் பயன்பாட்டை குறைத்தல், மறு சுழற்சி முயற்சிகள், கழிவு மேலாண்மை போன்றவை குறித்தும் ரயில்வே ஊழியர்களிடமும் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ரயில் நிலையங்களில் மட்கும் குப்பை மற்றும் மட்காத குப்பை ஆகியவற்றிற்கு தனித்தனியாக குப்பை தொட்டிகள் வைப்பது, தூய்மை பணியில் அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தேசிய சமூக சேவை இயக்க மாணவர்களை ஈடுபடுத்துவது போன்றவை இந்த பிரச்சாரத்தின் முக்கிய அம்சங்கள் ஆகும். ரயில் பயணிகளை சொந்தமாக தண்ணீர் பாட்டில் வைத்துக் கொள்ள மற்றும் சாப்பிடுவதற்கு மரத்திலான தட்டு, கரண்டி ஆகியவற்றை பயன்படுத்த ஊக்கப்படுத்தி பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகிறது. வீதி நாடகங்கள் மூலமும் பிரச்சாரம் மேற்கொள்ள ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. பள்ளி மாணவ மாணவிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த அவர்களுடன் கலந்துரையாடல், கட்டுரை மற்றும் ஓவியப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இந்த பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக மதுரை ரயில் நிலையத்தில் புதன்கிழமை (மே 28) அன்று பொது நிறுவன சமூகப் பொறுப்பு திட்டத்தின் கீழ்

டிவிஎஸ் மென்பொருள் நிறுவன ஊழியர்கள் தன்னார்வ தொண்டாக தூய்மை பணியில் ஈடுபட்டனர். 20 சாக்குகளில் மட்கும் மற்றும் மட்காத குப்பைகளை சேகரித்து ரயில்வே நிலைய நடைமேடைகள், ரயில் பாதைகள் ஆகியவற்றை தூய்மைப்படுத்தினர்.




# பழனியில் உலக பட்டினி தினத்தை முன்னிட்டு தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பாக அன்னதானம் வழங்கப்பட்டது

திண்டுக்கல், மே.29-

திண்டுக்கல் மேற்கு மாவட்டம் பழனியில் உலக பட்டினி தினத்தை முன்னிட்டு மனிதன் உழைப்பதற்கு முக்கியமான காரணம் உணவு. ஆனால், பெரும்பாலான மக்களுக்கு சத்தான உணவு கிடைப்பதில்லை. ஒரு வேளை மட்டும் சாப்பிட்டுவிட்டு உழைக்கும் தொழிலாளியும், தண்ணீர் மட்டும் குடித்துவிட்டு உறங்கும் தாய்மார்களும், காலையில் காசு இல்லாமல் 2 இட்லி மட்டும் அல்லது டீ குடித்துவிட்டு கல்லூரிக்குச் செல்லும் மாணவர்களும் இங்கு ஏராளம்.மனிதனாகப் பிறந்த அனைவருக்கும் உணவு, உடை, இருப்பிடம், சுகாதாரம், கல்வி ஆகியவை சமமாகக் கிடைக்கும் சமூகத்துக்காக செயல்படுவதே பட்டினி தினத்தில் நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய உறுதிமொழியாகும். அதன் ஒரு பகுதியாக தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் ஆணைக்கிணங்க கழகத்தின் பொதுச் செயலாளர் ஆனந்த் வழிகாட்டு தலின்படி அடிவாரப் பகுதிகளில் பொது மக்களுக்கு மாவட்டச் செயலாளர் கார்த்திக் ராஜா மாவட்ட செயற்குழு உறுப்பினர் பாலன் ஆகியோர் தலைமையில் அறுசுவை அன்னதானம் ஆயிரத்திற்கு மேற்பட்டோருக்கு வழங்கப் பட்டது. இந்நிகழ்வில் இணைச்செயலாளர் விஜய் சிவா. . நகரச் செயலாளர் மீதுன். மற்றும் ஒன்றியம், நகர.மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்



# ஜூன் 2ம்தேதி பள்ளிகள் திறப்பு கட்டிமேடு அரசு பள்ளியில் தூய்மை பணிகள் தீவிரம்

திருத்துறைப்பூண்டி, மே.29-

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி அருகே உள்ள கட்டிமேடு அரசு மேல்நிலைப் பள்ளியில் தூய்மை பணி நடைபெற்று வருகின்றது.கோடை விடுமுறைக்கு பின் அனைத்து பள்ளிகளும் ஜூன் 2ம் தேதி திங்கள்கிழமை திறக்கப்படுகிறது. வரும் கல்வி ஆண்டில் பள்ளிகள் திறக்கப்படுவதற்கு முன்பு மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகள் பள்ளிக்கல்வி இயக்குநர் வழிகாட்டுதல்படி, கட்டிமேடு அரசு பள்ளியில் தூய்மைப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றது.பள்ளி அறையில் உள்ள பெஞ்ச், டெஸ்க், நாற்காலி வர்ணம் பூசப்பட்டு மாணவர்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. பள்ளி கட்டிடத்தின் மேற்பரப்பில் சேர்ந்துள்ள குப்பைகள் அகற்றப்பட்டு சுத்தம் செய்யப்பட்டது. மேலும் பள்ளியில் உள்ள அனைத்து மின்சாதனங்கள் மற்றம் மின் சுவிட்சுகள் நல்ல முறையில் செயல்படுகின்றதா என்பதை தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்கள் உறுதி செய்தனர். பெற்றோர் ஆசிரியர் கழகம், பள்ளி மேலாண்மைக் குழு மற்றும் ஆசிரியர்கள் ஐந்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்கள் ஆறாம் வகுப்பு சேரவும், 8 மற்றும் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்கள் முறையே 9 மற்றும் 11ஆம் வகுப்பு சேர பள்ளியைச் சுற்றியுள்ள அனைத்து கிராமங்களிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாணவர்கள் பயன்பாட்டிற்கான குடிநீர் தொட்டி மற்றும் மேல் நீர் தேக்க தொட்டி அனைத்திலும் உட்புறம் கிரிமி நாசினி கொண்டு நன்கு சுத்தம் செய்யப்பட்டு தூய்மையாகவும் பாதுகாப்பான குடிநீர் மாணவர்களுக்கு கிடைக்க வகையில் உறுதி செய்யப்பட்டது.பள்ளியில் நடைபெறும் பணிகளை தலைமை ஆசிரியர் மு ச பாலு, பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் அப்துல் முனாப், பள்ளி மேலாண்மை குழு தலைவி தேன்மொழி, மற்றும் ஆசிரியர்கள் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.




■ இராமநாதபுரம் மாவட்டத்தில் காவல் துறையின் சமூக அக்கறை மற்றும் மக்களுடன் நேரடி தொடர்பை நிலைநாட்டும் வகையில், "உங்கள் ஊரில் உங்கள் SP" என்ற திட்டத்தின் கீழ் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் G.சந்தீஷ் 27.05.2025 அன்று பரமக்குடி உட்கோட்டம், வழிமறிச்சான் கிராமத்தை நேரில் பார்வையிட்டு, அங்குள்ள பொதுமக்கள், முக்கிய தலைவர்கள் மற்றும் இளைஞர்களுடன் கலந்துரையாடினார். இந்த சந்திப்பின் போது, அக்கிராம பகுதிகளில் நிலவும் சமூக சூழ்நிலை, பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகள் மற்றும் மக்கள் எதிர்கொள்ளும் குறைகளை கவனமாக கேட்டு, அவற்றின் தீர்வுக்கான வழிமுறைகள் குறித்து பரிசீலனை செய்து, சம்பந்தப்பட்ட காவல் அதிகாரிகளுக்கு தேவையான வழிகாட்டு ஆலோசனைகளை வழங்கினார். மேலும், 10ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவிகளுக்கு வெகுமதி வழங்கி பாராட்டுகளை தெரிவித்தார்கள்.

# கோவை, நீலகிரிக்கு அடுத்த 2 நாட்களுக்கு 'ரெட் அலர்ட்' வானிலை ஆய்வு மையம்

சென்னை, மே.29-

நீலகிரி மற்றும் கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகளில் ஒருசில இடங்களில் கன முதல் அதி கனமழையும், திருநெல்வேலி மாவட்டத்தின் மலைப்பகுதிகள், தேனி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், திருப்பூர் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் ஓரிரு வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. ஓரிரு இடங்களில் தரைக்காற்று 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும், என்றும் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: கடந்த 24 மணி நேரத்தில், நீலகிரி, கோவை, தென்காசி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் பெரும்பாலான இடங்களிலும், தேனி மாவட்டத்தில் அநேக இடங்களிலும் மழை பெய்துள்ளது. நீலகிரி மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தின் மலைப்பகுதிகளில் ஒருசில இடங்களில் கன முதல் மிக கனமழை பெய்துள்ளது. கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகளில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழை பெய்துள்ளது.

நேற்று (மே 27) ஒடிசா கடலோரப்பகுதிகளை ஒட்டிய வடமேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வுப்பகுதி, இன்று (மே 28) காலை 5.30 மணி அளவில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதியாக வலுப்பெற்று காலை 8.30 மணி அளவில் அதே பகுதிகளில் நிலவுகிறது. இது மெதுவாக வடக்கு திசையில் நகர்ந்து, வடக்கு வங்கக்கடல் பகுதிகளில், காற்றழுத்த தாழ்வு மண்டலமாக அடுத்த 24 மணி நேரத்தில் வலுவடையக்கூடும். தென்னிந்திய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவிகிறது.

இதன் காரணமாக, இன்று (மே 28) தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஓரிரு இடங்களில் தரைக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும். நீலகிரி மற்றும் கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகளில் ஒருசில இடங்களிலும், திருநெல்வேலி மாவட்டத்தின் மலைப்பகுதிகள், தென்காசி மற்றும் தேனி மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் கன முதல் மிக கனமழையும், திருப்பூர், திண்டுக்கல் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

மே 29 மற்றும் மே 30ம் தேதிகளில், தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஓரிரு இடங்களில் தரைக்காற்று 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும். நீலகிரி மற்றும் கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகளில் ஒருசில இடங்களில் கன முதல் அதி கனமழையும், திருநெல்வேலி மாவட்டத்தின் மலைப் பகுதிகள், தேனி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், திருப்பூர் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

மே 31 முதல் ஜூன் 3ம் தேதி வரை, தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும், என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில், நாளை (மே 29) வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 3536 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 28 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.



மீனவர்களுக்கான எச்சரிக்கை: தமிழக கடலோரப்பகுதிகளில், இன்று (மே 28) முதல் மே 30 வரை, தமிழக கடலோரப்பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 60 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும். மே 31 மற்றும் ஜூன் 1ம் தேதிகளில், தென்தமிழக கடலோரப்பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 60 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

வங்கக்கடல் பகுதிகளில், இன்று (மே 28) மத்திய வங்கக்கடலின் அநேக பகுதிகளிலும், அதனை ஒட்டிய தெற்கு வங்கக்கடல் மற்றும் வடக்குகிழக்கு வங்கக்கடல் பகுதிகளிலும் சூறாவளிக்காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 65 கிலோ மீட்டர் வேகத்திலும், ஆந்திர கடலோரப் பகுதிகள், இதர தெற்கு மற்றும் மத்திய வங்கக்கடல் பகுதிகள், அந்தமான் கடல் பகுதிகளில், சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 60 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

மே 29ம் தேதி, வடக்கு வங்கக்கடல், மத்திய வங்கக்கடலின் அநேக பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 65 கிலோ மீட்டர் வேகத்திலும், ஆந்திர கடலோரப்பகுதிகள், இதர தெற்கு மற்றும் மத்திய வங்கக்கடல் பகுதிகள், அந்தமான் கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 60 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

மே 30ம் தேதி, வடகிழக்கு வங்கக்கடல் பகுதிகள், மத்திய வங்கக் கடலின் அநேக பகுதிகள், அதனை ஒட்டிய தெற்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 65 கிலோ மீட்டர் வேகத்திலும், வடக்கு வங்கக்கடல் பகுதிகள், ஆந்திர கடலோரப்பகுதிகள், இதர தெற்கு மற்றும் மத்திய வங்கக்கடல் பகுதிகள், அந்தமான் கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 60 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

மே 31ம் தேதி, மத்திய வங்கக்கடலின் அநேக பகுதிகள், அதனை ஒட்டிய தெற்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 65 கிலோ மீட்டர் வேகத்திலும், வடக்கு ஆந்திர கடலோரப்பகுதிகள், இதர தெற்கு மற்றும் மத்திய வங்கக்கடல் பகுதிகள், வடக்கு வங்கக்கடல் பகுதிகளில், சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 60 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

ஜூன் 1ம் தேதி, மத்தியகிழக்கு வங்கக்கடலின் சில பகுதிகள், அதனை ஒட்டிய தெற்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 65 கிலோ மீட்டர் வேகத்திலும், இதர தெற்கு மற்றும் மத்திய வங்கக்கடல் பகுதிகள், வடக்கு வங்கக்கடல் பகுதிகளில், சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 60 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

அரபிக்கடல் பகுதிகளில், இன்று ( மே 28) முதல் ஜூன் 1ம் தேதி வரை, தென்மேற்கு மத்தியமேற்கு அரபிக்கடலின் ஒருசில பகுதிகளில் சூறாவளிக் காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 65 கிலோ மீட்டர் வேகத்திலும், தென்கிழக்கு மத்தியகிழக்கு அரபிக்கடல், கொங்கன் கோவா, கர்நாடககேரள கடலோரப் பகுதிகள், மாலத்தீவு மற்றும் லட்சத்தீவு பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 60 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும். எனவே, மேற்குறிப்பிட்ட நாட்களில் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவுறுத்தியுள்ளது.




# திருப்பூர் மழை காற்றின் வேகம் காரணமாக மரங்கள் சாய்ந்தன நெடுஞ்சாலைத்துறை அகற்றினர்

திருப்பூர், மே.29-

திருப்பூர் நெடுஞ்சாலைத்துறை வடக்கு உட்கோட்டம். மற்றும் திருப்பூர் வடக்கு பிரிவைச் சார்ந்த மாநில நெடுஞ்சாலை ஆன திருப்பூர் விஜயமங்கலம் சாலையில். கி மி.1/4 சாலையில் வலது புறம் தனலட்சுமி மில் வளாகத்தில் உள்ள பழமை வாய்ந்த அத்திமரம் அதே சாலையில் இரண்டாவது ரயில்வே கேட் அருகில் பலத்த காற்றினால் மரங்கள் சாலையில் சாய்ந்தது போக்குவரத்துக்கு இடையூறாக இருந்ததால் நெடுஞ்சாலை துறைக்கு தகவல் கொடுக்கப் பட்டவுடன் நெடுஞ் சாலை துறை. அதிகாரி கோட்ட பொறியாளர் ரத்தினசாமி அவர்களின் உத்தரவின் படி உதவி கோட்ட பொறியாளர் விஜயகுமார் மற்றும் இளம் பொறியாளர் ராஜேஷ் மற்றும் பணியாளர்களுடன் சென்று சாலையில் விழுந்த மரங்களையும் மக்கள் போக்குவரத்து இடையூறு ஏதும் ஏற்படாத வகையில் உடனடியாக மரங்களை அப்புறப் படுத்தினர். அங்கு இருந்த மக்களும் சமூக ஆர்வலர்களும் நெடுஞ்சாலை துறையின் சேவையை பாராட்டினர்.



# ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் நெடுஞ்சாலைத்துறை பருவமழை வெள்ள தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை

ஈரோடு, மே.29-

பருவமழை மற்றும் அதனால் ஏற்படும் வெள்ளபாதிப்புகளை எதிர்கொண்டு மீட்பு மற்றும் சீரமைப்பு பணிகளை மேற்கொள்ளும் வகையில் மணல் மூட்டைகள், காற்றில் கீழே விழும் மரங்களை அகற்ற அறுவை இயந்திரங்கள், துஊடீ இயந்திரங்கள், மற்றும் முன்களபணியாளர்களான சாலைப்பணியாளர்கள் மற்றும் சாலை ஆய்வாளர்களை கொண்டு குழு அமைக்கப்பட்டு தயார் நிலையில் உள்ளது. ஈரோடு மாவட்டம், நெடுஞ்சாலைத்துறை கோபிசெட்டிபாளையம் பிரிவில்பராமரிக்கப்பட்டு வரும் மாநில சாலைகள், மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகள் மொத்தம் 201 கி.மீ சாலை உள்ளது. எதிர்வரும் பருவமழையை எதிர்கொள்ளும் வகையில் நெடுஞ்சாலைத்துறை சார்பில் அனைத்து முன்னேற் பாடுகளும் தயார் நிலையில் உள்ளது. மேற்கண்ட சாலை களில் மழைநீர் தேங்காமல் இருக்க அனைத்து சிறுபாலங்கள் மற்றும் பெரிய பாலங்களில் உள்ள அடைப்புகள், புதர்கள் அகற்றப்பட்டு வருகிறது.மேலும், அதிக மழையினால் ஏற்படும் மண் அரிப்பு, மண் சரிவு, சாலை துண்டிப்புகளை உடனடியாக சரிசெய்து போக்குவரத்திற்கு தடைகள் ஏற்படாமல் இருக்க போதிய முனனேற்பாடுகள் அனைத்தும் செயலாக்கம் செய்யப்பட்டு ஆயத்த நிலையில் சாலைப்பணியாளர்கள் 36 பேர், சாலை ஆய்வாளர்கள் 4 பேர் தயார் நிலையில் இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்கண்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை உதவிக் கோட்டப்பொறியாளர் சு.மோகன்ராஜ், உதவிப்பொறியாளர் விஜய் கிருஷ்ணா ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்..



# போடிநாயக்கனூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் ஜமாபந்தி (வருவாய் தீர்வாயம்)

தேனி, மே.29-

தேனி மாவட்டம் வட்டாட்சியர் அலுவலகத்தில் கடந்த ஐந்து நாட்களாக ஜமாபந்தி (வருவாய் தீர்வாயம்) நடைபெற்றது. ஏராளமான மனுக்கள் பெறப்பட்டு உடனுக்குடன் அவை தீர்வு காணப்பட்டு பலருக்குச் சான்றிதழ் அளிக்கப்பட்டது

28 5 2025 இன்றும் கோட்டாட்சியர் சையது முகமது தலைமையில் வட்டாட்சியர் சந்திரசேகர் முன்னிலையில் நடைபெற்றது. மற்றும் தொடர்புடைய துறை அலுவலர்களும் கலந்து கொண்டு பலருடைய மனுக்களுக்கு தீர்வுகண்டு முடித்து வைத்தனர் இன்றும் ஒரு விதவைப் பெண்ணுக்கு நேரடியாக விதவைச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

# ஆனைமலை விற்பனை கூடத்தில் ரூ.42.16 லட்சத்துக்கு கொப்பரை ஏலம்

ஆனைமலை, மே.29-

பொள்ளாச்சியை அடுத்த ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நேற்று கொப்பரை ஏலம் நடந்தது. ஏலத்திற்கு ஆனைமலை மற்றும் கோட்டூர், பொள்ளாச்சி அதனை சுற்றியுள்ள பகுதிகளை சேர்ந்த 98 விவசாயிகள் மொத்தம் 577 மூட்டை கொப்பரை கொண்டு வந்திருந்தனர்.



அவை தரம் பிரித்து ஏலம் விடப்பட்டது.

இதில் முதல் தரம் 278 மூட்டை கொப்பரை ரூ.191 முதல் ரூ.206 வரையிலும். 299 மூட்டை இரண்டாம் தர கொப்பரை ரூ.151 முதல் ரூ.175 வரை என 259 குவிண்டால் கொப்பரை மொத்தம் ரூ.42.16 லட்சத்துக்கு ஏலம் போனது. இதனை 8 வியாபாரிகள் கொள்முதல் செய்தனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

# ஜூன் மாதம் ஆபரேஷன் சிந்தூர் குறித்து நாடாளுமன்ற சிறப்பு கூட்டம்: திரிணமூல் கோரிக்கை

புதுடெல்லி, மே.29-

மழைக்கால நாடாளுமன்ற கூட்டத்தொடருக்கு முன்பாக ஆபரேஷன் சிந்தூர் குறித்த நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தை நடத்த வேண்டும் என்று திரிணமூல் காங்கிரஸ் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது. மழைக்கால கூட்டத்தொடர் வழக்கமாக ஜூலை மாதத்தில் நடைபெறும்.

இந்நிலையில், திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் மாநிலங்களவை துணைத் தலைவர் சகாகா கோஷ் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறும்போது, "பஹல்காம் தாக்குதலுக்கு பின்பும், ஆபரேஷன் சிந்தூரின் போதும் திரிணமூல் காங்கிரஸ் கட்சி அரசுக்கு ஆதரவாக நின்றது. பயங்கரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டை விளக்க அனுப்பப்பட்டிருக்கும் தூதுக்குழுக்களையும் ஆதரித்தது. அரசுக்கு எங்களின் முழு ஆதரவினை வழங்கியிருக்கிறோம் என்று நாங்கள் நம்புகிறோம்.



இப்போது, மாநிலங்களவை உறுப்பினர் கபில் சிபல் எழுப்பிய ஆபரேஷன் சிந்தூர் குறித்த நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்ற கோரிக்கையை நாங்கள் ஆதரிக்கிறோம். மழைக்கால கூட்டத்தொடருக்கு முன்பாக ஜூன் மாதத்தில் நாடாளுமன்ற சிறப்புக்கூட்டம் நடத்தப்பட வேண்டும் என்று நாங்கள் கோரிக்கை விடுக்கிறோம்." என்றார்.

திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் மாநிலங்களவைத் தலைவர் டெரக் ஓ பிரேன் செய்தியாளர்களிடம் கூறுகையில், "பாஜகவுக்கு எதிராக போராடும் கட்சிகளாகிய நாங்கள், நாடாளுமன்ற சிறப்புக்கூட்டம் நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து ஒன்றிணைந்து பணியாற்றி வருகிறோம்." என்றார்.

ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் ஏப்.22 ம் தேதி நடந்த பயங்கரவாத தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் மே 7ம் தேதி, பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள 9 பயங்கரவாத நிலைகளின் மீது ஆபரேஷன் சிந்தூரின் கீழ் இந்தியா துல்லிய தாக்குகல் நடத்தியது. இந்தியாவின் நடவடிக்கையைத் தொடர்ந்து பாகிஸ்தான் இந்திய ராணுவ நிலைகளை குறிவைத்து மே 8, 9 மற்றும் 10 தேதிகளில் தாக்குதல் நடத்தியது. பாகிஸ்தானின் முயற்சிகளுக்கு இந்தியா தக்க பதிலடி கொடுத்தது.

இதனைத் தொடர்ந்து ஆபரேஷன் சிந்தூர், பயங்கரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் பூஜ்ஜிய சகிப்புத்தன்மையை விளக்கும் வகையில், ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு கவுன்சில், முக்கிய நட்பு நாடுகளுக்கு அனைத்துக்கட்சி உறுப்பினர்கள் குழுக்களை இந்தியா அனுப்பி வைத்துள்ளது.

இந்த அனைத்துக்கட்சி உறுப்பினர்கள் குழுக்களுக்கு, பாஜகவைச் சேர்ந்த ரவி சங்கர் பிரசாத், பைஜயந்த் பாண்டா, ஐக்கிய ஜனதாதளம் கட்சியைச் சேர்ந்த சஞ்சய் குமார் ஜா, சிவசேனாவின் ஸ்ரீகாந்த் ஷிண்டே, காங்கிரஸ் கட்சியின் சசி தரூர், திமுகவின் கனிமொழி, என்சிபி (சரத் பவார் அணி) யின் சுப்ரியா சுலே ஆகியோர் தலைமை தாங்குகின்றனர்.

இந்த ஏழு அனைத்துக்கட்சி குழுக்கள் 32 நாடுகளுக்கு பயணப்பட்டு வருகின்றன. இதில் சஞ்சய் குமார் ஜா தலைமையிலான குழுவில், திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் தேசிய பொதுச்செயலாளர் அபிஷேக் பானர்ஜி இடம் பெற்றுள்ளார்.


# வேலூர் மாவட்டத்தில் 14 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் வீரர்கள் தேர்வு மாவட்ட தலைவர் நருவீ மருத்துவமனை நிறுவனத்தலைவர் சம்பத் தகவல்

<u>14 வயதுக்குட்பட்ட விருப்பமுள்ள கிரிக்கெட் வீரர்கள் ஜூன் 1ஆம் தேதி சீருடை உடன் வர அறிவிப்பு</u>



வேலூர், மே.29-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, சேண்பாக்கம் ராஜலட்சுமி விளையாட்டு மைதானத்தில், வேலூர் மாவட்டத்தில் 14 வயதுக்கு உட்பட்ட கிரிக்கெட் வீரர்கள் தேர்வு ஜூன் 1ம் தேதி நடக்க உள்ளது என கிரிக்கெட் விளையாட்டு சங்க மாவட்டத் தலைவரும், நறுவீ மருத்துவமனை நிறுவன தலைவர் சம்பத் தகவல் அழைத்துள்ளனர். மாநில கிரிக்கெட் சங்கம் சார்பில், 14 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான மாவட்டங்களுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டியை மாநில கிரிக்கெட் சங்கம் நடத்த உள்ளது. இப்போட்டிகளில் வேலூர் மாவட்டம் சார்பில் பங்கேற்க உள்ள வீரர்களை தேர்வு செய்வதற்கான நிகழ்வு வரும் ஜூன் மாதம் 1ம் தேதி (01.06.2025) காலை 9 மணிக்கு வேலூர் சேண்பாக்கம் பகுதி ராஜேஸ்வரி வளாகத்தில் உள்ள கிரிக்கெட் அகாடமி மையத்தில் நடைபெற உள்ளதாக வேலூர் மாவட்ட கிரிக்கெட் சங்க தலைவரும், வேலூர் நறுவீ மருத்துவமனை தலைவருமான முனைவர். ஜி.வி.சம்பத் தகவல் தெரிவித்துள்ளார். இந்த தேர்வில் பங்கேற்க 01.09.2011 தேதியிலோ, அதற்கு பிறகு பிறந்தவர்களாக இருக்க வேண்டும். தேர்வுக்கு வருபவர்கள் ஆதார் அட்டை மற்றும் கிரிக்கெட் சீருடையில் வரவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். இதுசம்மந்தமாக மேலும் தகவல் அறிய வேலூர் மாவட்ட கிரிக்கெட் சங்க கௌரவ சங்க செயலாளர் எஸ். ஸ்ரீதரனை மொபைல் எண்.70105 94657 மூலமாக தொடர்பு கொண்டு விவரங்கள் அறியலாம் என்று தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



# சமூக ஆர்வலர்கள் கோரிக்கை

சென்னை, மே.29-

சென்னை சைதாப்பேட்டையில் உள்ள மாநில நெடுஞ் சாலை துறை கோட்ட பொறியாளர் அலுவலகத்தில் மாநில, தேசிய நெடுஞ்சாலை குரோம்பேட்டை ஜிஎஸ்டி சாலையில் தனியார் இன்டர்நெட் மென்டு கம்பெனி அரசை ஏமாற்றி மக்கள் வரி பணத்தை வீணாக்கி குத்தி நாசம் செய்ததை புகார் அளித்த சமூக ஆர்வலர் தி கார்த்திக் கண்ணன் பொதுச்செயலாளர் மக்களுக்கான மக்கள் இயக்கம் என்பவரின் புகாரை பெற்றுக் கொண்ட கோட்டை பொறியாளர் அலுவலகத்தின் SDO முதுநிலை வரைவு அலுவலர், மேலாளர், தபால் பிரிவில் உள்ள ஆவண எழுத்தர் ஆகியோர் புகார் மனுவுக்கான ஒப்புகை ரசீது கொடுக்க மறுத்ததால், அரசாணை எண் 73/2018 மற்றும் உயர் நீதிமன்றத்தின் மகத்தான தீர்ப்பை சுட்டி காட்டியதின் மீது எந்த பயனும் இல்லாததை அடுத்து முதலமைச்சரின் தனி பிரிவு மற்றும் காவல் அவசர உதவி 100க்கு போன் செய்து அங்கு சைதாப்பேட்டை காவலர் வந்த பின்னர் மனுவுக்கான ஒப்புதல் ரசீது மனுதாரருக்கு வழங்கப்பட்டது. எனவே இது போன்ற அவல நிலைகள் தமிழ்நாட்டின் தலைமை இடமான சென்னையில் நடைபெற்று வருகிறது என்றால் மற்ற மாவட்டங்களில் இது போன்று நடைபெறாது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை என சமூக ஆர்வலர்கள் அனைவரும் குமுறுகின்றனர். இது போன்ற சம்பவங்கள் இனி எந்த அரசு அலுவலகத்திலும் நடக்காத வண்ணம் அரசு இதற்கு என தனி அரசாணை பிறப்பிக்க வேண்டும் என்றும் அதனை மீண்டும் மீறினால் அதற்கான தண்டனையையும் அரசு ஆணையில் குறிப்பிட வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.



# காட்பாடி, காங்கேயநெல்லூரில் எடப்பாடி கே.பழனிச்சாமி பிறந்தநாள் முன்னிட்டு ஆஇஅதிமுக சார்பில் அன்னதான நிகழ்ச்சி

வேலூர், மே.29-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, காங்கேயநெல்லூரில் அஇஅதிமுக சார்பில் பொதுச்செயலாளர், முன்னாள் முதல்வரும், எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி கே.பழனிச்சாமி பிறந்தநாள் முன்னிட்டு வேலூர் அஇஅதிமுக மாநகர செயலாளர் எஸ்.ஆர்.கே. அப்பு தலைமையில் அன்னதானம் வழங்கினார். இந்நிகழ்வில் அஇஅதிமுக அமைப்பு செயலாளர் ராமு, வண்டறந்தாங்கல் பஞ்சாயத்து தலைவர் ராகேஷ், காட்பாடி பகுதி செயலாளர் நாராயணன், வேலூர் மாநகராட்சி 10 வது வார்டு அதிமுக கவுன்சிலர் ரமேஷ் மற்றும் அதிமுக நிர்வாகிகள் உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டு அன்னதான விழாவை சிறப்பித்தனர்.

# குறிப்பிட்ட கிராமங்களில் ”உழவரைத்தேடி வேளாண்மை - உழவர் நலத்துறை” திட்டமுகாமானது நடைபெறவுள்ளது

சிவகங்கை மே.29

சிவகங்கை மாவட்டம் தமிழ்நாடு முதலமைச்சரால் ”உழவரைத்தேடி வேளாண்மை ஞ உழவர் நலத்துறை” திட்டம் தொடங்கி வைக்கப்படவுள்ளது.



இத்திட்டத்தின்படி, வேளாண்மை உழவர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் வணிகம், விதைச்சான்றளிப்புத் துறை வட்டார அலுவலர்கள் மற்றும் சார்புத்துறைகளான கால்நடை பராமரிப்புத்துறை, மீன்வளத்துறை, கூட்டுறவுத்துறை, பட்டு வளர்ச்சித்துறை, வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் ஆகியோர்களால், உழவர்களை அவர்களது வருவாய் கிராமங்களிலேயே நேரடியாக சந்தித்து அவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குவதோடு, வேளாண்மையினை அடுத்த நிலைக்கு எடுத்துச் செல்லும் பயிர் சார்ந்த தொழில்நுட்பங்களையும், வேளாண்மை உழவர் நலத்துறை மற்றும் சார்புத்துறைகளின் திட்டங்களையும் எடுத்துக் கூறி அவர்கள் பயன்பெறும் வகையில் மாதம் இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் முகாம்கள் நடத்தப்படவுள்ளது.

சிவகங்கை மாவட்டத்தில் உழவரைத்தேடி வேளாண்மை ஞ உழவர் நலத்துறை திட்டம் முகாமானது 29.05.2025 முதல் செயல்படுத்தப்பட்டு, மாவட்டத்தில் மொத்தம் உள்ள 521 வருவாய் கிராமங்களிலும் ஓராண்டுக்குள் செயல்படுத்தப்படவுள்ளது.

அதில் சிவகங்கை வட்டாரத்தில் இடையமேலூர் மற்றும் நாமனூர் ஆகிய கிராமங்களிலும், காளையார்கோவில் வட்டாரத்தில் வாகைக்குளம் மற்றும் குருந்தனிவாரியேந்தல் ஆகிய கிராமங்களிலும், மானாமதுரை வட்டாரத்தில் கீழப்பசலை மற்றும் கால்பிரவு ஆகிய கிராமங்களிலும், இளையான்குடி வட்டாரத்தில் மேலாயூர் மற்றும் கோட்டையூர் ஆகிய கிராமங்களிலும், திருப்புவனம் வட்டாரத்தில் பாப்பாக்குடி மற்றும் மேலச்சொரிக்குளம் ஆகிய கிராமங்களிலும், சாக்கோட்டை வட்டாரத்தில் மித்ராவயல் மற்றும் நேமம் ஆகிய கிராமங்களிலும், தேவகோட்டை வட்டாரத்தில் பொன்னலிக்கோட்டை மற்றும் மாவிடுதிக்கோட்டை ஆகிய கிராமங்களிலும், கண்ணங்குடி வட்டாரத்தில் சித்தனூர் மற்றும் தேரளப்பூர் ஆகிய கிராமங்களிலும், கல்லல் வட்டாரத்தில் தட்டட்டி மற்றும் வெளியாத்தூர் ஆகிய கிராமங்களிலும், திருப்பத்தூர் வட்டாரத்தில் ஒழுகமங்கலம் மற்றும் வடக்கு இளையாத்தங்குடி ஆகிய கிராமங்களிலும், சிங்கம்புணரி வட்டாரத்தில் மேலப்பட்டி மற்றும் எஸ்.வி.மங்கலம் ஆகிய கிராமங்களிலும், எஸ்.புதுார் வட்டாரத்தில் மாந்தகுடிப்பட்டி மற்றும் முசுண்டப்பட்டி ஆகிய கிராமங்களிலும் உழவரைத்தேடி வேளாண்மை ஞ உழவர் நலத்துறை திட்டம் முகாமானது நடைபெறவுள்ளது.

எனவே, விவசாயிகள் தங்களது பகுதிகளில், வேளாண்மை ஞ உழவர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் அனைத்து துறைகள் மற்றும் சார்புத்துறைகளின் சார்பில் நடத்தப்படும் முகாம்களில் கலந்து கொண்டு, அரசின் சார்பில் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்து அறிந்துகொண்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித்,தெரிவித்துள்ளார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161